HaiVE மற்றும் செயின்ட் ஜோசப்ஸ் குழுமம் மூலம் இயக்கப்படும் இந்தியாவின் முதல் AI தொழில்நுட்ப வணிக காப்பகம்

சென்னை, 09, நவ: சிங்கப்பூரை தலைமையிடமாகக் கொண்ட முன்னணி ஆன்-பிரைமைஸ் AI நிறுவனமான HaiVE, AI வென்ச்சர் ஃபேக்டரியைத் தொடங்குவதற்கு செயின்ட் ஜோசப்ஸ் குழும நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கையெழுத்திட்டுள்ளது. AI வென்ச்சர் ஃபேக்டரி என்பது AI ஸ்டார்ட் அப் தொழில்நுட்ப வணிக காப்பகம் (TBI) ஆகும். நவம்பர் 8, 2023 அன்று நடைபெற்ற வெளியீட்டு நிகழ்வில் 5,000 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) துறை அமைச்சர் திரு டி.எம். அன்பரசன், HaiVE வாடிக்கையாளரும் முதலீட்டாளருமான Hiller Marine Australia இன் இணை நிறுவனர் மைக்கல் ஹில்லர் இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

தமிழ்நாடு அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு டி.எம். அன்பரசன் நிகழ்வில் பேசுகையில், "பிசினஸ் இன்குபேட்டர்ஸ் எனப்படும் வணிக காப்பகங்களை ஸ்டார்ட் அப் டிஎன் (StartupTN) முன்னெடுப்பு மூலம் தமிழ்நாடு அரசு அதிக அளவில் நிறுவியுள்ளது. இந்த இன்குபேட்டர்கள் நிதி உதவியை வழங்குவதோடு, பல்வேறு துறைகளை சேர்ந்த ஆர்வமுள்ள தொழில்முனைவோரை இணைக்கும் தளமாக செயல்படுகின்றன. இவற்றின் கீழ் வழங்கப்படும் நிதி ஆதரவுக்காக வருடாந்திர பட்ஜெட்டில் குறிப்பிடத்தக்க தொகையாக ரூ. 144 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. புத்தொழில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக வணிக காப்பகம் ஒன்றை HaiVE (ஹைவ்) நிறுவியுள்ளது, மாணவர்கள் மற்றும் பிற தொழில்முனைவோரின் யோசனைகள் மற்றும் திட்டங்களை வெற்றிகரமான தொழில் முயற்சிகளாக மாற்றுதல் மற்றும் வழிகாட்டுதல் ஆகியவை இதன் சேவைகளில் அடங்கும்.

திருச்சியில் உள்ள பள்ளி ஆசிரியர்களுக்கு 'பணத்தின் மொழியைக் கற்றுக்கொள்ளுங்கள்' முதலீட்டாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்சி, நவ.9,

முதலீட்டாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு முயற்சியின் ஒரு பகுதியாக கோடக் மியூச்சுவல் பண்ட் திருச்சியில் உள்ள பள்ளி ஆசிரியர்களுக்கு 'பணத்தின் மொழியைக் கற்றுக்கொள்ளுங்கள்' என்னும் தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சியை மத்திய அரசின் சிபிஎஸ்இ கல்வி வாரியத்துடன் இணைந்து நடத்தியது.முதலீடு மற்றும் நிதி சம்பந்தமான பல்வேறு விஷயங்களை ஆசிரியர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இந்த நிகழ்ச்சியை கோடக் மியூச்சுவல் பண்ட் நடத்தியது. இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இந்தியாவின் எதிர்கால வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்கும். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டில் உள்ள 5175க்கும் மேற்பட்ட சிபிஎஸ்இ ஆசிரியர்களுக்கும், திருச்சியில் உள்ள 225க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கும் நிதி சம்பந்தமான அறிவுப்பூர்வமான விஷயங்கள் குறித்தும், அது சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும் என்று இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

கோடக் மியூச்சுவல் பண்ட் நிறுவனத்தின் டிஜிட்டல் பிசினஸ், மார்க்கெட்டிங் மற்றும் அனலிட்டிக்ஸ் தலைவர் கிஞ்சல் ஷா கூறுகையில், இந்த முதலீட்டாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியான 'சீகோ பைசோ கி பாஷா' மூலம், நிதி ஆதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். நமது நாட்டின் தலைவிதியை வடிவமைப்பதிலும்,புதியதலைமுறையைஉருவாக்குவதிலும் ஆசிரியர்கள் முக்கியப் பங்காற்றுகிறார்கள். சிபிஎஸ்இ உடனான எங்களின் இந்த கூட்டாண்மை என்பது கல்வியாளர்களிடையே நிதியியல் கல்வியறிவு மற்றும் முதலீடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு புதிய முயற்சியாகும். ஒட்டுமொத்தமாக, பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நிதி பற்றி நன்கு அறிந்த ஆசிரியர்களின் உதவியுடன் சிறப்பான எதிர்காலத்தை நாம் வடிவமைக்க முடியும் என்று தெரிவித்தார்.

சேலம் மாவட்டத்தில் 70–வது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழாவினை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பா.இரவிக்குமார் தலைமையில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர் இரா.மீராபாய் முன்னிலையில், சேலம் மத்திய கூட்டுறவு வங்கி கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் சேலம் சரக துணைப்பதிவாளர் சி.முத்துவிஜயா, துணைப்பதிவாளர் (பயிற்சி) செல்வி.ஏ.எஸ்.லேகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிமன்றம், தஞ்சாவூர்
E.A.No. 2/2022
In
E.P.No.13/2021
In
O.S.No.346/2019

காந்திமதி
...மனுதாரர்/வாதி
1 கருணாநிதி
2. முகமது இக்பால் (இறந்தார்)
...எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்
3. சமீனா
4. சானு
...எதிர்மனுதாரர்கள் /வாரிசுதாரர்கள்

நீதிமன்ற உத்தரவுபடி அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுக்கா, மற்றும் டவுன், சேவப்பநாயக்கன்வாரி, கீழ்கரை, கதவு எண்: 68-பி என்ற முகவரியில் வசித்து வரும் பன்னீர்செல்வம் மனைவி திருமதி. காந்திமதி அவர்கள், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் டவுன், வ.வ.சி நகர், எண்: 12 என்ற முகவரியில் வசித்து வந்த ஹாஜி திரு. முகமது இக்பால் மனைவி 3-வது எதிர்மனுதாரரான திருமதி.சமீனா மற்றும் 4-வது எதிர்மனுதாரரான சானு ஆகியவர்களுக்கு எதிராக மேற்படி நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதி மன்றத்திலிருந்து 3-வது மற்றும் 4-வது எதிர்மனுதாரரான தங்களுக்கு செய்திதாளில் விளம்பரம் செய்து அறிவிப்பு செய்ய கடந்த 07.11.2023 உத்தரவாகி உள்ளது. மேற்படி வழக்கில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் எதிர் வரும் 06.12.2023 அன்று தாங்கள் நேரிடையாகவோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக மேற்படி நீதிமன்றத்தில் ஒரு தலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

D. கிருத்திகா., B.Sc., B.L.,
வழக்கறிஞர், தஞ்சாவூர்

மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிமன்றம், தஞ்சாவூர்
E.A.No. 3/2022
In
E.P.No.13/2021
In
O.S.No.346/2019

காந்திமதி
...மனுதாரர்/வாதி
1 கருணாநிதி
2. முகமது இக்பால் (இறந்தார்)
...எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்
3. சமீனா
4. சானு
...எதிர்மனுதாரர்கள் /வாரிசுதாரர்கள்

நீதிமன்ற உத்தரவுபடி அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுக்கா, மற்றும் டவுன், சேவப்பநாயக்கன்வாரி, கீழ்கரை, கதவு எண்: 68 பி என்ற முகவரியில் வசித்து வரும் பன்னீர்செல்வம் மனைவி திருமதி. காந்திமதி அவர்கள், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் டவுன், வ.வ.சி நகர், எண்: 12 என்ற முகவரியில் வசித்து வந்த ஹாஜி திரு. முகமது இக்பால் மனைவி 3-வது எதிர்மனுதாரரான திருமதி.சமீனா மற்றும் 4-வது எதிர்மனுதாரரான சானு ஆகியவர்களுக்கு எதிராக மேற்படி நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதி மன்றத்திலிருந்து 3-வது மற்றும் 4-வது எதிர்மனுதாரரான தங்களுக்கு செய்திதாளில் விளம்பரம் செய்து அறிவிப்பு செய்ய கடந்த 07.11.2023 உத்தரவாகி உள்ளது. மேற்படி வழக்கில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் எதிர் வரும் 06.12.2023 அன்று தாங்கள் நேரிடையாகவோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக மேற்படி நீதிமன்றத்தில் ஒரு தலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

D. கிருத்திகா., B.Sc., B.L.,
வழக்கறிஞர், தஞ்சாவூர்

பெயர் திருத்தம்

தமிழ்நாடு, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், கும்பகோணம், மேலக்காவேரி, தங்கம் நகர், எண்: 2/599, என்ற முகவரியில் வசிக்கும் **முஹம்மது யாசிர் (MOHAMED YASIR) த/பெ ஜகபர் அலி (JAHABAR ALI)** ஜனவரி 17.2001 பிறப்பு ஆகிய நான் இனி **முஹம்மது யாசீர் (MOHAMED YASEER) த/பெ ஜகபர் அலி (JAHABAR ALI)** என்று இன்றிலிருந்து அழைக்கப்படுவேன் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். **(PASSPORT No. H3633495)**

முஹம்மது யாசீர்
(MOHAMED YASEER)
த/பெ ஜகபர் அலி
(JAHABAR ALI)

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக,
(இ).த.ப.எண்: 22/2023/ஆ2

தமிழ்செல்வன்
த/பெ மாணிக்கம்
பரங்கிவெட்டிக்காடு
ஆம்பலாப்பட்டு தெற்கு,
ஒரத்தநாடு வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்
...மனுதாரர்

வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஒரத்தநாடு
...எதிர்மனுதாரர்

கோட்டாட்சியர் அறிவுறுத்தலின்படி அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தையார் **மாணிக்கம் த/பெ முத்துசாமி** என்பவர் கடந்த **13.05.2009**-ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். இறப்பு சான்று பெறுவதற்கு எனது தந்தையார் **மாணிக்கம்** இறப்பு மேற்படி எதிர் மனுதாரர் அலுவலலகத்தில் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்த மீது மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் சமூகம் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனை யை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு மீது ஒரு தலை பட்சமாக உத்தரவு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

தமிழ்செல்வன்
த/பெ மாணிக்கம்

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக,
(இ).த.ப.எண்: 21/2023/ஆ2

தமிழ்செல்வன்
த/பெ மாணிக்கம்
பரங்கிவெட்டிக்காடு
ஆம்பலாப்பட்டு தெற்கு,
ஒரத்தநாடு வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்
...மனுதாரர்

வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஒரத்தநாடு
...எதிர்மனுதாரர்

கோட்டாட்சியர் அறிவுறுத்தலின்படி அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் **சரசு க/பெ (லேட்) மாணிக்கம்** என்பவர் கடந்த **20.07.2016**-ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். இறப்பு சான்று பெறுவதற்கு எனது தாயார் **சரசு** இறப்பு மேற்படி எதிர் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்த மீது மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் சமூகம் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனை யை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு மீது ஒரு தலை பட்சமாக உத்தரவு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

தமிழ்செல்வன்
த/பெ மாணிக்கம்

தீபாவளி நாளில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை மீறி பட்டாசு வெடித்தால் வழக்கு: போலீசார் எச்சரிக்கை

சென்னை,நவ.09

சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் கூடுதல் கமிஷனர்கள் பிரேமானந்த் சின்கா (தெற்கு), அஸ்ரா கார்க் (வடக்கு), சுதாகர் (போக்குவரத்து) ஆகியோர் இன்று நிருபர்களுக்கு பேட்டியளித்தனர். பின்னர் கூடுதல் கமிஷனர் பிரேமானந்த் சின்கா கூறியதாவது:- காலை 6 மணியில் இருந்து 7 மணி வரையிலும், இரவு 7 மணி முதல் 8 மணி வரை என 2 மணி நேரம் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு கூறி உள்ளது. அனுமதிக்கப்பட்ட நேரத்தை தாண்டி பட்டாசுகள் வெடிப்பவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

IndoStar Home Finance Private Limited
Regd. Office: - Unit No. 305, 3rd Floor, Wing 2/E, Corporate Avenue, Andheri- Ghatkopar Link Road, Chakala, Andheri (East), Mumbai – 400093
CIN : U65990MH2016PTC271587 **Tel:** +91 22 45107701
Email: connect@indostarhfc.com; **Website:** www.indostarhfc.com

அறிவிப்பு

நிறுவனத்தின் கிளை அலுவலகம், 2021-ம் ஆண்டு வங்கி அல்லாத நிதி நிறுவனம் - ஹைவுசிங் -பைனான்ஸ் கம்பெனி (ரிசர்வ் வங்கி) திசைகள், 2021 இன் பத்தி 93ன் அடிப்படையில் அறிவிப்பு இதன்மூலம் கொடுக்கப்பட்டுள்ளது அருணாவளாகம், எண்.21, தாடிக்கொம்பு சாலை, திண்டுக்கல்-624001 செயல்பாடுகள் அருகிலுள்ள MKS டவர்ஸ், 3வது தளம், #9, ஒய்.எம்.ஆர். பட்டி, ஆர்த்தி தியேட்டர்ரோடு, திண்டுக்கல், தமிழ்நாடு-624001 கிளை அலுவலகத்திற்கு மாற்றப்படுவதால், பிப்ரவரி 7, 2024 வணிக நேரத்தின் முடிவில் இருந்து மூடப்படும். ஏதேனும் உதவி தேவைப்பட்டால், மேலே குறிப்பிட்டுள்ளபடி அருகிலுள்ள கிளை அலுவலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் அல்லது connect@indostarhfc.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

இந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்தில் (www.indostarhfc.com) அனுகலாம்.

இந்தோஸ்டார் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
Sd/-
நிதி சதானி
நிறுவனத்தின் செயலாளர்

தேதி: 08.11.2023

69 ரூபாயில் ருசியான சுவைமிகுந்த "க்ரேவ் & சேவ்" உணவு வகைகள்: டகோ பெல் அறிமுகம்

கோவை, நவ, 09, உலகின் முன்னணி மெக்சிகன் உணவகமாக திகழும் டகோ பெல், 6 விதமான சுவைகளில் ஏராளமான சலுகைகளுடன் தனது புதிய "க்ரேவ் & சேவ்" என்னும் புதிய மெனுவை இந்திய வாடிக்கையாளர்களுக்காக சமீபத்தில் அறிமுகம் செய்தது. இந்த மெக்சிகன் மசாலா சுவையுடன் கூடிய இதன் விலை 69 ரூபாயில் துவங்குகிறது. உங்கள் நாவில் நீர் ஊறச் செய்யும் வகையில் உங்கள் சுவை மொட்டுகளை தூண்டும் விதமாக "க்ரேவ் & சேவ்" என்னும் இந்த புதிய மெனு சிறந்த சுவை மற்றும் தரத்துடன் குறைந்த விலையில் கிடைக்கிறது.

இந்தபுதியமெனுஅறிமுகம்குறித்துபர்மன்ஹாஸ்பிடாலிட்டி நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியும் டகோ பெல்லின் இந்தியாவிற்கான பிரத்யேக பங்குதாரருமான ஹர்னீத் சிங் ராஜ்பால் கூறுகையில், மக்களின் ரசனை மற்றும் ருசி என்பது ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மாறி வருகிறது. அவர்கள் புதுவிதமான ருசியான உணவுகளை அதிகம் தேடுகிறார்கள். அவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் வகையில் எங்களின் புதிய வகை "க்ரேவ் & சேவ்" உணவுகள் வெறும் 69 ரூபாயில் துவங்குகின்றன. இவற்றை இளைஞர்கள் அதிகம் விரும்பிச் சாப்பிடுவார்கள். மேலும் இந்த மொறுமொறுப்பான சுவை மிகுந்த சைவ மற்றும் அசைவ உணவுகள் வகைகள் வாடிக்கையாளர்களின் நாவில் நீர் ஊறச் செய்வதோடு மீண்டும் மீண்டும் அவற்றை வாங்கிச் சாப்பிடத் தூண்டும் வகையில் தயாரிக்கப்படுகிறது. பண்டிகை காலத்தையொட்டி சலுகை விலையில் இந்த உணவுகளை நாங்கள் அறிமுகம் செய்துள்ளோம். வாடிக்கையாளர்கள் இந்த உணவுகளை குறைந்த விலையில் வாங்கி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழலாம் என்று தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு பாதாம் பரிசளிக்க 3 யோசனைகள்

ஊட்டச்சத்து நிபுணர் உடல் ஆரோக்கிய ஆலோசகர் ஷீலா கிருஷ்ணசாமி தகவல்

சென்னை, நவ. 9- தீபாவளி என்றாலேயே ஒருவருக்கு ஒருவர் பரிசையும் அன்பையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளும் பண்டிகையாகும். பரிசு என்பது பாசத்தின் வெளிப்பாடாகும். அந்த பரிசை ஆரோக்கியம் தரும் பரிசாக வழங்கும் போது அது இன்னும் கூடுதல் மகிழ்ச்சியை அளிக்கும். அந்த வகையில் இந்தபண்டிகை காலத்தில் உங்கள் விருந்தினர் களுக்கு ஆரோக்கியம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும் பரிசு தொடர்பாக 3 யோசனைகளை ஊட்டச்சத்து நிபுணரும் உடல் ஆரோக்கிய ஆலோசகருமான ஷீலா கிருஷ்ணசாமி கூறியுள்ளார். பாதாமில் உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான ஏராளமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. பண்டிகைகள் என்றாலே பெரும்பாலும் அனைவரும் அதிகம் சிற்றுண்டியையே அதிகம் விரும்பிச் சாப்பிடுவார்கள். இதில் ஆரோக்கியமான தின்பண்டங்களைத் தேர்ந்தெடுப்பது என்பது நம் உடலுக்கு ஊட்டமளிக்கும் அதேவேளையில் கொண்டாட்டத்தையும் மேலும் உற்சாகமானதாக்குகிறது. வறுத்த கொண்டைக்கடலை, பாப்கார்ன், மக்கானா மற்றும் பாதாம் போன்ற பருப்பு வகைகள் நிறைந்த சிற்றுண்டி பரிசு பெட்டியை தயார் செய்யுங்கள். மேலும் அவற்றுடன் எந்தவித தயக்கமும் இல்லாமல் நீங்கள் வீட்டில் தயார் சிற்றுண்டிகளையும் சேர்த்து உங்கள் விருந்தினர்களுக்கு பரிசாக அளியுங்கள். இந்த பண்டிகையை மகிழ்ச்சியுடனும் ஆரோக்கியத்துடனும் உங்கள் விருந்தினர்களுடன் கொண்டாடி மகிழுங்கள்.

பொது அறிவிப்பு

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, திருவேதிகுடி, காளியம்மன் கோவில் தெரு, எண்: 189-ல் வசிக்கும் சீனிவாசன் மகன் வெற்றிச்செல்வன் என்ற எனது கட்சிக்காரர் அறிவுறுத்தலின் பெயரில் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

எனது கட்சிக்காரருக்கு கடந்த 21.09.2023 தேதி ஆவண எண்: 2416/2023 மூலம் கீழ்கண்ட சொத்து விபரத்தில் உள்ள பதிவு அலுவலகத்தில் எனது கட்சிக்காரர் தனது மனைவி சங்கீதா அவர்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி அதை கீழ்கண்ட சொத்து விபரத்தில் உள்ள பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து அது முதல் எனது கட்சிக்காரரின் மனைவி சங்கீதா அனுபோகத்தில் உள்ளார். மேலும், கீழ்கண்ட சொத்து விபரத்தில் உள்ள சொத்தை ஈடுகாட்டி VERITAS FINANCE PVT LTD-ல் கடன் கோரிய போது சொத்தின் மூல பட்டா எண்: 73 காணாமல் போனது தெரிய வந்தது. எனது கட்சிக்காரர் பெயரில் உள்ள மூல பட்டா எண்: 73-ல் உள்ள கீழ்கண்ட சொத்தின் மீது யாருக்கேனும் உரிமையோ, பின் தொடர்ச்சியோ இருப்பின் நாளது தேதி முதல் 7 தினங்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதற்கு பின்னிட்டு வரும் எந்த விதமான ஆட்சேபனையும் எனது கட்சிக்காரரை எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொத்து விபரம்: தஞ்சாவூர் பதிவு மாவட்டம், வட்டம் & தாலுகா, திருவையாறு துணை பதிவு மாவட்டம், திருவேதிகுடி கிராமம் & ஊராட்சி, நத்தம் பழைய புல எண்: 69/பா, புதிய புல எண்: 69/17 ஒழுங்கற்றவடிவில் பட்டாவில் கண்டுள்ளபடி 211.0 சதுர மீட்டர். நான்கெல்லை விபரம்: வடக்கில்-வாய்க்கால், மேற்கில்-சீனிவாசன் வீடு, புழக்கடை, கிழக்கில்-சந்தர்ராசு புழக்கடை, தெற்கில்-காளியம்மன் கோவில் தெரு இதற்குள்பட்டது.

S. சரசகலாமணி.,B.A.,LLB., வழக்கறிஞர், எண்: 102, பூங்கா தெரு, யாகப்பா நகர், தஞ்சாவூர்-613007, செல்: 9443866315.

பத்திரம் காணவில்லை

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம், செங்காட்டுப்பட்டி கிராமம், 71,நடுப்பட்டி என்ற முகவரியில் வசித்து வரும் மலர்கொடி, க/பெ ஞானசேகரன் ஆகிய நான், எனது பெயரில் துறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான ஆவண எண் 1987/1987-ன் படி பதிவான அசல் கிரையப் பத்திரத்தை 20-10-2023 ஆம் தேதி ஒரு கை பையில் எடுத்து கொண்டு,துறையூர் பேருந்து நிலையத்தில் இறங்கும் போது நான் வைத்திருந்த கை பையும் அதில் வைத்திருந்த எனது அசல் கிரையப் பத்திரத்தையும் காணவில்லை.நான் பேருந்து மற்றும் பல இடங்களில் தேடிப்பார்த்தும், மேற்படி எனது அசல் ஆவணங்கள் கிடைக்கவில்லை.இது பற்றி 06-11-2023 அன்று ஆன்லைன் மூலம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன்.புகார் எண் -CHM23234799. யாரேனும் மேற்படி ஆவணங்களை கண்டெடுத்தால் கீழ்காணும் முகவரிக்கு தெரியப்படுத்தவும்.

இப்படிக்கு
மலர்கொடி, க/பெ. ஞானசேகரன்,
71, நடுப்பட்டி, செங்காட்டுப்பட்டி,
துறையூர் வட்டம்,திருச்சி மாவட்டம்.
செல் : 9677181824

வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், திருச்சிராப்பள்ளி
ந.க.எண்:அ4/5580/2023
திருமதி.ச.கலா, க/பெ.சங்கர்,
கதவு எண்: 28/16, இந்திரா நகர்,
எடமலைப்பட்டி புதூர்,
பிராட்டியூர் கிழக்கு கிராமம்,
திருச்சிராப்பள்ளி – 620 012.
– மனுதாரர்
– எதிர் –
இல்லை
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுவில் மனுதாரராகிய நான் எனது கணவர் சங்கர் என்பவர் கடந்த 06.05.2018 – ம் தேதி மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் இறந்ததை தனது அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறியதையடுத்து மேற்படி இறப்பினை பதிவு செய்ய உத்தரவிட வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்காக வாய்தா மேற்படி வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி முன்பாக விசாரணை நடைபெறுகிறது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

திருமதி.ச.கலா
மனுதாரர்

IN THE COURT OF V MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL AT CHENNAI
M.C.O.P No: 8347/2018
Minor Sruthi rep by her Mother &NF Mrs.P,Sasikala
...Petitioner
Vs
1. P.Sathyaraj
2. The New India Assurance Co. Ltd.,
....Respondents
To
Mr. P. Sathyaraj, S/O Pandurangan No: 23, Mettu Street, Sekkadu, Pattabiram, Chennai–72.
1st respondent please take notice that the above MCOP No. 8347/2018 The Hon'ble V Judge small causes court at Chennai, has ordered notice to you by way of Publication on 2/11/2023 and the matter stands posted for 18/12/2023 hence you are hereby informed to appear before the judge V Small Causes Court at Chennai on 18/12/2023 at 10.30 am either in person or through a pleader failing which the matter will be decided in your absence.
Yours
S.DHARMARAJA
Counsel for petitioner

In the Court of III Judge Small Causes at Chenni
O.P.No. 2646 of 2023
Radhakrishnan
...Petitioner
Vs
1.Mr.Anwar,
2.M/s.Reliance General Insurance Co.Ltd.,
...Respondents
To
Mr.Anwar.,
S/O Mohammed Hussain.M,
No.25/7F,PPD, Thangal, Tiruvallur
Chennai–600 019.
Take notice the above said matter was posted on 14.12.2023 for your appearance before the Hon'ble III Judge Court of Small Causes. Kindly make arrangements to appear on that day either by you or by your Counsel on that day at about 10.30 a.m otherwise the matter will be decided in your absence.
Miss.S.SENTHAMIL SELVI,
COUNSEL FOR PETITIONER

2 வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை
M.C.O.P.No.1933/2023
ராவத்ராம்
...மனுதாரர்
எதிர்
1. சுந்தர மூர்த்தி.S
2. பியூசர் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
...மனுதாரர்கள்
பெறுநர்,
சுந்தர மூர்த்தி.S
No. 947. D.T. H. ரோடு.
திருவொற்றியூர்,
சென்னை– 600019.
மேற்கண்ட வழக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற 17.11.2023 அன்று தங்கள் வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று தாங்கள் நேரிலோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமோ கோர்ட்டில் காலை 10.30 மணிக்கு ஆஜராகத் தவறினால் வழக்கின் முடிவு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும்.
ஆ. சுமன் குமார்.
மனுதாரரின் வழக்கறிஞர்

2வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை
M.C.O.P.No.1932/2023
R. ஹன்ஜா தேவி
...மனுதாரர்
...எதிர்...
1. சுந்தர மூர்த்தி.S
2. பியூசர் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
...எதிர் மனுதாரர்கள்
பெறுநர்,
சுந்தர மூர்த்தி.S.
NO. 947. D.T.H. ரோடு.
திருவொற்றியூர்
சென்னை– 600019.
மேற்கண்ட வழக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற 17.11.2023 அன்று தங்கள் வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று தாங்கள் நேரிலோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமோ கோர்ட்டில் காலை 10.30 மணிக்கு ஆஜராகத் தவறினால் வழக்கின் முடிவு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும்.
ஆ.சுமன் குமார்
மனுதாரரின் வழக்கறிஞர்

In the Court of III Judge Small Causes at Chennai
O.P.No. 2303 of 2023
Leelamani
...Petitioner
Vs
1.Mr.Paramasivam.
2.M/s.TATA AIG General Insurance Co.Ltd..
...Respondents
To
Mr.Paramasivam,
S/O Lakshmanan,
No.42 Andiappan street,
Old washermenpet,
Chennai–